1989 ஏப்ரல் 29]

புத்தாற்றில் நன்னிலம் வாய்க்கால் தலைப்பில் படுக்கை அணை

161—(*வினா எண். 761) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி வளர்ச்சிப் பணி குடந்தைக் கோட்டத்தில் புத்தாற்றில் நன்னிலம் வாய்க்கால் தலைப்பில் படுக்கை அணை அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே (அ) திட்டம் ஆய்வில் உள்ளது.

(ஆ) புத்தாற்றில் எங்கெங்கு புதிய படுக்கை அணைகள், ரெகுலேட்டர்கள் அமைக்க வேண்டும் என்று ஆய்வு செய்து ஒட்டுமொத்த கருத்துருவை தயாரித்து வருகிறது. அதற்கான பாசனப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு இத்திட்டத்தின் அவசியம் குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புத்தாற்றில் நன்னிலம் வாய்க்காலினுடைய தலைப்பில் படுக்கை அணை கட்டுவதற்கு, Plan sanction வாங்கி, நான்கு ஆண்டுகள் ஆகின்றன. நான்காண்டுகளாக, பணத்தை வாங்கி வைத்துக்கொண்டு, இன்னும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், இந்த நான்காண்டுக் காலமாக அந்தப் பாசனம் பெறக்கூடிய வாய்ப்பு இருந்தும், வசதி இருந்தும், அது பயனளிக்க முடியாத அளவிற்குப் பொதுப் பணித்துறை திட்டத்தை ஒத்திப் போட்டுள்ளது. அதை விரைவிலே முடிப்பதற்கு ஆராயப்படுமா என்று கேட்பதோடு, பெரும்பாலான ஆறுகளில், வாய்க்காலினுடைய தலைப்பிலிருந்து தண்ணீர் ஏறுவதில் மிகச் சிரமம் ஏற்படுகிறது. Theoretical bed level maintain ஆக மாட்டேன் என்கிறது. ஆகையினால் முறை வைத்துத் தண்ணீர் விடுகின்ற காரணத்தால், சில வாய்க்கால்களில் அந்த Theoretical bed level இல்லாத காரணத்தினால், வாய்க்காலில் தண்ணீர் ஏறவே மாட்டேன் என்கிறது. ஆற்றிலே தண்ணீர் வருவதை, முறைக் காலங்களில் பார்க்கிறார்களே தவிர, முறையாகப் பாசனம் பெறவில்லை. எந்தெந்த வாய்க்கால்களில் theoretical bed level maintain ஆகவில்லையோ அதற்கெல்லாம் விதி விலக்கு கொடுத்து theoretical bed level-ஆவது கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இந்தக் கருத்தைக் கருத்திற்கொண்டுதான், ஆற்றில் எங்கெங்கு படுக்கை அணைகள் கட்டப்பட வேண்டுமென்று ஒட்டுமொத்தமாக அரசு ஆய்ந்துவருகிறது. அந்த ஆய்வு முடிந்த பிறகு அந்த அணைகள் கட்டப்படும்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நீராவி சலவை இயந்திரம்

162—(*வினா எண். 163) திரு. கே. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நீராவி சலவை இயந்திரம் (Steam Laundry) அமைக்க அரசு ஏற்கெனவே அனுமதி அளித்திருந்தும் இன்னும் அது நிறைவேற்றப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பணியை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் திரு. க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:

தலைவர் அவாகளே, (அ) ஆம்.

(ஆ) இந்த ஆண்டு ஆகஸ்டு மாத இறுதிக்குள் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள நீராவி சலவை இயந்திரத்தை அமைக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அரசு அனுமதியளித்து எவ்வளவு காலம் இது நிறைவேற்றப்படாமல் இருந்து வந்திருக்கிறது. அப்படி நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கே சலவை செய்யவேண்டிய நோயாளிகளுடைய துணிகள் சலவை செய்ய முடியாமல் அழுக்குத் தண்ணீரில் சலவை செய்து வந்ததை மோசமாக இருக்கிறது என்று டாக்டர்கள் ரிப்போர்ட் செய்ததால் அங்கே பக்கத்தில் இருக்கும்படியான ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் சலவை செய்து வந்தார்களே, அது நிறுத்தப்பட்டது உண்மையா? அதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 19-9-1986-ல் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ. 33.13 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஒரு நீராவி சலவை இயந்திரத்தை நிறுவுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இயந்திரங்கள் வாங்கு